என்று கேட்டார்கள். அதற்கு அமைச்சர் அவர்கள் பதில் கூறும்பொழுது உறுப்பினர் வக்காலத்து வாங்கிப் பேசுகிறார்கள் என்று சொன்னார்கள். இந்த மன்றத்தில் பேசுகின்ற நேரத்தில் உறுப்பினர்கள் எல்லோருக்கும் அவரவர்களுடைய கொள்கையைப்பற்றிப் பேசுவதற்கும், தங்களுக்கு ஒரு சந்தேகம் ஏற்பட்டால் அதைப்பற்றி கேட்பதற்கும் உரிமை இருக்கிறது. சட்ட மன்றத்தில் வக்காலத்து வாங்கிக்கொண்டு பேசினார் என்று சொல்வது சரியா? நீதிமன்றத்தில் தான் வக்காலத்து முறை என்று இருக்கிறதே தவிர, சட்டமன்றத்தில் வக்காலத்து முறை இருக்கிறதா? வக்காலத்து வாங்கிப் பேசுகிறார் என்று சொல்வது தாங்கள் இந்தச் சபையில் அனுமதிக்கப்படுகிற வார்த்தை என்று கருதுகிறீர்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது ஒரு தேவையில்லாத பாயின்டு ஆப் ஆர்டர்.

Thiru K. VINAYAKAM : On a point of order, Sir. Usually lawyers are the only class of people that are entitled to file 'vakalats' and argue in a Court of law on behalf of another, viz., their client. But here, in this House, we are not functioning as lawyers. We are all members duly elected by the people. We are not expected to file 'vakalats' here and argue on behalf of Government of India. Such being the case, is not the Hon. Minister lowering the reputation and dignity of the House when he goes to the extent of saying that we have taken vakalats from the Government of India.?

மாண்புமிகு பேரவைத்தலைவர் : திரு. மார்டின் அவர்கள் எழுப்பிய பாயின்டு ஆஃப் ஆர்டரில் பொருள் இல்லை என்று நான் குறிப்பிட்டு விட்டேன். அப்படிச் சொன்னதில் ஒன்றும் தவறில்லை. அவர் பாயின்டு ஆஃப் ஆர்டர் மீது நமது விநாயகம் அவர்கள் இன்னொரு பாயின்டு ஆஃப் ஆர்டர் எழுப்புவது முறையல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. மகாதேவன் : கனம் சபாநாயகர் அவர்களே, ஒரு தன்னிலை விளக்கம்.

மாண்புமிகு பேரவைத்தலைவர் : தன்னிலை விளக்கம் பிறகு ஆகட்டும். இப்பொழுது இல்லை.

(3) அறிவிப்பு.

சில அவையுரிமைக் கேள்விகள் ஒத்திவைப்பு.

மாண்புமிகு பேரவைத்தலைவர் : உறுப்பினர் திரு. சின்னசாமி அவர்கள் நவசக்தி என்ற பத்திரிகையின்மீது கொடுத்திருந்த உரிமைப் பிரச்னையை இன்று எடுத்துக்கொள்வதாகக் கூறினேன். வேண்டிய தகவல் இன்னும் கிடைக்காத காரணத்தினால்நாளைக்கு எடுத்துக்கொள் கிறேன்.

உறுப்பினர் திரு. கொளத்தூர் கோதண்டம் அவர்கள் " நவமணி " என்ற பத்திரிகையின் மீது ஒரு உரிமைப் பிரச்னையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதையும் நான் நாளைக்கு எடுத்துக்கொள்கிறேன்.

அடுத்து, உறுப்பினர் திரு. இராமச்சந்திரன் அவர்கள் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் மீது ஒரு உரிமையை மீறிய பிரச்னையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இன்று இல்லாத காரணத்தினால், அதையும் நான் நாளைக்கு எடுத்துக் கொள்கிறேன்.